Cambridge O Level

**Cambridge International Examinations**
Cambridge Ordinary Level

**TAMIL** **3206/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2014**

**1 hour 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*2034808447*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, glue or correction fluid.
DO **NOT** WRITE IN ANY BARCODES.

Answer **all** questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

This document consists of **4** printed pages and **4** blank pages.

DC (SLM) 81799/2
© UCLES 2014

CAMBRIDGE
International Examinations

**BLANK PAGE**

© UCLES 2014

## Section A – Translation

**1** Translate into **English**.

மலைகளைச் சுற்றியுள்ள நகரத்தின் தெற்குப் பகுதிகளில் தேசத்தின் எல்லா இடங்களிலிருந்தும் வேலை தேடி மக்கள் வந்து குடியேறினார்கள். அடிக்கடி பெரிய குடும்பங்கள் மண், பழைய இரும்பு, மரங்கள் ஆகியவற்றால் கட்டிய சிறிய வீடுகளில் (குடிசைகளில்) வாழ்ந்து வந்தார்கள். குழந்தைகள் பகலில் இந்த வீடுகளுக்கு நடுவில் ஓடியும், மற்ற வீடுகளுக்கு உள்ளேயும் வெளியேயும் வந்தும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஆண்களும் பெண்களும் காலையில் நகரத்திற்கு வேலைக்கும் வேலை தேடவும் போவார்கள்.

அரசாங்கம் இந்த இடத்தில் ஒரு புதிய பள்ளிக்கூடமும் ஒரு சிறிய மருத்துவ மனையும் கட்டினார்கள். ஆனால் குடிசைகளும் அதிகமாகிக் கொண்டு இருந்தன. குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்தில் இடமில்லாததால் திருப்பி அனுப்ப வேண்டி இருந்தது. மழை அதிகம் பெய்தால், மண்சுவர்களும் தரைகளும் தண்ணீரில் அடித்துக் கொண்டு போய் விடும். கூரைகளும் இரும்பினால் செய்த சுவர்களும் நாசமாகி விடும்.

ஒவ்வொரு வருடமும் மண் சரிவுகள் பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. இவ்வளவு இருந்தும் நகரங்கள் பெரிதாகிக் கொண்டே போகின்றன. நகரத்தைச் சுற்றியும் மலைக்குப் பக்கங்களிலும் பலமில்லாத அஸ்திவாரங்களின் மீது வீடுகள் கட்டப்படுகின்றன.

[10]

**2** Translate into **Tamil**.

It was the summer holiday, and schools had finished for the year the day before. The family woke up early for their week-long break. They had already packed their clothes and put the luggage into the car.

The children were excited and started singing as they left home. They were still singing as the car turned onto the motorway. A few minutes later, the car slowed down and stopped. The children opened the windows and looked out. All they could see ahead of them was a very long line of cars, all standing in a traffic jam.

“When will we get there?” the youngest child asked. Their mother did not answer. In the next hour, they moved only a mile. The children started to complain about feeling hungry and thirsty. All of them were irritated. Other drivers got angry and started sounding their car horns.

After a while, a man got out of his car. He stamped his foot and gestured to the cars behind him to move back. Jumping into his car again, he reversed a little, drove forward and then turned the car into the other lane. Shaking his head, he headed back home.

[20]

© UCLES 2014

## Section B – Reading Comprehension

Do **not** translate the passage below. First read it carefully and then answer, briefly and in **Tamil**, the questions that follow.

மழைக் காலத்தின் முதல் மழை ஆரம்பித்து விட்டது. தெருக்கள் நடப்பதற்கும் வாகனங்களின் போக்குவரத்திற்கும் மிகவும் அபாயகரமாக இருந்தன. இரண்டு சகோதரர்கள் மழை பெய்யாத குளிர் காலங்களில் வழக்கமாக சைக்கிளில் பள்ளிக்கூடம் போவார்கள். ஆனால் தெருவில் தண்ணீர் இருந்தபடியால் மேடு பள்ளங்களைப் பார்ப்பது கஷ்டமாக இருந்தது. இவர்கள் தங்கள் பை நிறைய புத்தகங்களை முதுகில் தூக்கிக் கொண்டு நடந்து போகும் போது, முன்னால் நடந்த விபத்துகளைப் பார்த்தார்கள். அதில் கிழிந்து போன புத்தகப் பக்கங்களும் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தவரின் பையிலிருந்து கீழே விழுந்த பழங்களும் காய்கறிகளும் தெருவின் ஓரத்தில் சிதறிக் கிடப்பதைக் கண்டார்கள்.

இரு சகோதரர்களும் தெருவில் சிதறிக் கிடந்த புத்தகங்களையும் பழங்களையும் பார்த்து தெருக்கள் மோசமாக இருக்கும் என்று தெரிந்தும் ஏன் மக்கள் சைக்கிள்களை வெளியே எடுக்கிறார்கள் என்று ஆச்சரியப்பட்டுச் சிரித்தார்கள். தெருக்களில் உள்ள பள்ளங்களைச் சுற்றி வாகனங்களை ஓட்டுவோர் மெதுவாக ஓட்டினார்கள். இவர்கள் நடந்து போகும் போது, பஸ்ஸில் போகும் அவர்களின் நண்பர்கள் கைகளை ஆட்டினார்கள். சகோதரர்கள் கற்களைச் சுற்றியும் தெருவில் கார் அல்லது பஸ் வேகமாக வரும்போது தங்கள் மேல் தண்ணீர் தெளிக்காமல் இருப்பதற்காக நடைபாதையின் ஓரங்களிலும் நடந்து போனார்கள்.

பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தில், ஒரு தந்தை தன் மகனை சைக்கிளின் பின்னால் உட்கார்த்தி வைத்துக் கூட்டிக் கொண்டு வருவதை இவர்கள் (இந்த சகோதரர்கள்) பார்த்தார்கள். பையன் ஒரு சின்ன புத்தகப் பையை முதுகிலும் தன் சாப்பாட்டுப் பெட்டியை தனக்கு முன்னாலும் வைத்து இருந்தான். சகோதரர்கள் மறுபடியும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டு ஒரு பக்கமாக ஒதுங்கி இருந்து, தங்களை நோக்கி வரும் சைக்கிளைப் பார்த்துக் கொண்டு இருந்தனர். இவர்களுக்கு முன்னால் கொஞ்ச தூரத்தில் தந்தையும் மகனும் கீழே விழப் பார்த்தனர். இரண்டு சகோதரர்களும் குதித்து முன்னால் ஓடினார்கள். ஒருவன் சைக்கிளின் வலது கைப்பிடியை பிடித்துக் கொண்டான். அதனால் சைக்கிள் மெதுவாக விழுந்தது. இன்னொரு சகோதரன் மகனை கீழே பிடித்துக் கொண்டான். அப்படிப் பிடித்துக் கொண்டபடியால் மகன் தரையில் விழவில்லை. ஒரு சகோதரன் சைக்கிளைப் பிடித்துக் கொண்டபடியால் தந்தை மெதுவாகக் கீழே விழுந்தார். ஈரமாகவும் மண்ணாகவும் இருந்தபடியால் அவருடைய கால்சட்டை கிழிந்து விட்டது. அழுக்கைத் தன் சட்டையில் இருந்து தட்டிவிட்டு மெதுவாக எழுந்து தன் மகன் சரியாக இருக்கிறானா என்று பார்த்தார். தந்தை சகோதரர்களுக்கு தன் கைகள் இரண்டையும் நீட்டி நன்றி கூறினார். “நாங்கள் பள்ளிக்கூடத்தில் இருந்து மிகவும் தூரத்தில் இருக்கிறோம். தெருக்கள் மிகவும் மோசமாக இருப்பதால் எங்கள் வீட்டுப் பக்கம் பள்ளிக்கூட பஸ் வரமுடியவில்லை. நான் வழக்கமாக சைக்கிளில் வருவதில்லை. இன்று என் பையன் ஒரு நாடகத்தில் பங்கு கொள்வதால் கட்டாயம் பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டும். என்னுடைய சைக்கிள் பழுதடைந்து விட்டது.

அவனை இப்பொழுது பள்ளிக்கூடத்தில் எப்படிக் கொண்டு விடப் போகிறேன் என்று தெரியவில்லை” என்றும் கூறினார்.

சகோதரர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஒரு சகோதரன், தான் தந்தையுடன் சைக்கிள் கடைக்குப் போவதாகச் சொன்னான். இவன் தன் சகோதரனைப் பார்த்து சின்னப்பையனைப் பள்ளிக்கூடத்துக்குக் கூட்டிக் கொண்டு போகச் சொன்னான். அவன் தந்தையுடன் சைக்கிளை எடுத்துக் கொண்டு சைக்கிள் கடைக்குப் போனான். சைக்கிள் கடைக்குப் போவதற்கு முன்னால், தந்தை மகனைப் பார்க்க, மகன் தலையை அசைத்துச் சிரித்தான்.

Now answer the following questions briefly, using your own words as far as possible.

**3** மழை பெய்யாத குளிர் காலங்களில் இரண்டு சகோதரர்களும் எப்படிப் பள்ளிக்கூடம் போனார்கள்? [1]

**4** தெருக்கள் போவதற்கு ஏன் மிகவும் ஆபத்தாக இருந்தன? [2]

**5** சகோதரர்களுக்குத் தெருவில் விபத்துகள் நடந்தன என்று எப்படித் தெரிய வந்தது? [2]

**6** முன்னால் நடந்த விபத்தைப் பார்த்து ஏன் சகோதரர்கள் சிரித்தார்கள்? [1]

**7** மழை காலத்தில் பஸ்ஸுகள் எப்படி தெருவில் போயிற்று? [2]

**8** வாகனங்கள் பக்கத்தில் வரும்போது சகோதரர்கள் என்ன செய்தார்கள்? ஏன்? [2]

**9** விபத்து மோசம் ஆகாமல் இருக்க சகோதரர்கள் எப்படித் தடுத்தார்கள்? [3]

**10** சின்னப் பையன் தினமும் எப்படி பள்ளிக்கூடத்திற்குப் போனான்? இன்று ஏன் அப்படிப் போகவில்லை? [2]

**11** தந்தை ஏன் மிகவும் கவலையுடன் இருந்தார்? [3]

**12** தந்தையின் பிரச்சனையைப் போக்க சகோதரர்கள் என்ன செய்தார்கள்? [2]

Language and spelling [5]

**Total Marks [25]**

**BLANK PAGE**

© UCLES 2014 

**BLANK PAGE**

© UCLES 2014

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.

© UCLES 2014